## 12. அறிவைப் பயன் படுத்துங்கள்!

ஒரு அழகிய அடர்ந்த காடு.
அதில் பல மிருகங்களும் பறவைகளும் சந்தோஷமாக வாழ்ந்தன.
அவற்றுள் ஒரு முயலும் முள்ளம்பன்றியும் நல்ல நண்பர்களாக வாழ்ந்தனர்.
இருவருக்கு சமயோசித புத்தி அதிகம்.
அதனால் எப்படிப் பட்ட சூழ்நிலையையும் அவர்கள் சமாளித்து விடுவார்கள்.
ஒரு முறை காட்டுக்கு வெளியே வெகு தூரத்தில் இருவரும் விளையாடிக் கொண்டு இருந்தனர்.
அப்போது மழை பெய்யத் தொடங்கியது.
மழைக்கு ஒதுங்க மரம் கூட இல்லை! என்ன செய்வது?
ஒரு பாறைக்கு அடியில் காட்டுக் காளான்கள் பெரிது பெரிதாக முளைத்து இருந்தன.
இதைப் பார்த்த முயல் அவற்றுள் இரண்டைப் பிடுங்கியது.
அதைத் தலைக்கு மேலாகப் பிடித்துப் பார்த்தது.
மழைச் சாரல் தலை மீது விழவில்லை.
”ஆஹா! இயற்கை அருமையான குடை தந்ததே!” என்று மகிழ்ச்சியுடன் தன் தோழனுக்கும் தந்தது.
நண்பர்கள் நனையாமல் வீடு சேர்ந்தனர்.
மற்றொரு சமயம் ஒரு மலைக் காட்டில் விளையாடச் சென்றனர்.
அங்கே அழகிய பெரிய ஆப்பிள் மரம் பழங்களுடன் இருப்பதை இருவரும் கண்டனர்.
”ஆஹா! எத்தனை சுவையான பழங்கள்! காட்டில் நம் நண்பர்களுக்கும் தரலாமே?! ஆனால் எப்படித் தூக்கிச் செல்வது?” என்று முயல் வருந்தியது.
”கவலைப் படாதே! இதோ பார். என் மீது எத்தனை முட்கள், முடிந்த வரை பழங்களை என் முட்கள் மீது குத்தி வை, நான் தூக்கிச் செல்கிறேன்” என்று யோசனை சொன்னது முள்ளம்பன்றி.
அதன் படியே முயலும் செய்ய, ஆப்பிள் பழங்களைத் தூக்கிக் கொண்டு வீடு சேர்ந்து பலருக்கும் பகிர்ந்து தந்து மகிழ்ந்தன.